ஆங்காங்கு பிரித்தால் நல்ல வழியாக இருக்கும் என்றும், ஆகவே, அதைச் சிறுசிறு ஊராட்சி மன்றங்களாகப் பிரிப்பதற்கு உடனடியாக ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :—தலைவரவர்களே, முதலிலே பேரூராட்சியாக வேண்டுமென்று விரும்புகிருர்கள். பேரூராட்சியாக ஆனதற்குப்பிறகு அதில் ஏற்படும் சங்கடங்களைப் பார்த்து ஊராட்சி மன்றங்களாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்கிருர்கள். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போல் வள்ளல் நதி 16 சதுர மைல் பரப்பளவும், நரசிங்கபுரம் 50 சதுர மைல் பரப்பளவும், மயிலாடும்பாறை 100 சதுர மைல்கள் பரப்பளவும் உள்ளதாக இருப்பதால் இப்படிப்பட்ட சங்கடங்கள் இருக்கின்றன. இதில் வள்ளல் நதி பேரூராட்சியின் உத்தேச ஆண்டு வருமானம் 25,000 ரூபாய். ஆண்டு ஒன்றிற்கு அலுவலர்களின் சம்பளச் செலவு 22,500 ரூபாய் ஆகிவிடுகிறது. இவ்வளவு போனதிற்குப் பிறகு வேறு எதுவும் செய்யமுடியாது. நரசிங்கபுரம் பேரூராட்சியின் உத்தேச வருமானம் 49,000 ரூபாய், மயிலாடும்பாறையின் உத்தேச வருமானம் 70,000 ரூபாய். எனவே இதை மாற்றியமைப்பது நல்லது என்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிருர்கள். மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்தும், மற்ற அலுவலரிடமிருந்தும் இதுபற்றிய செயற் குறிப்புகள் வந்தபிறகுதான் அதன்மீது அரசு தக்க நடவடிக்கை மேற் கொள்ளும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்தக் குறிப்பிட்ட மயிலாடும் பாறை வருஷநாடு பகுதி, மலைப்பகுதியாக இருக்கிறது. அமைச்சரவர்கள் குறிப்பிட்டதுபோல 100 சதுர மைல் பரப்பு இருப்பதால் அதைப் பிரிப்பதற் கான உத்தேச நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:—தலைவரவர்களே, இப் போது பேரூராட்சியில் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருக்கிருர்கள். மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து செயற் குறிப்புகள் வந்த பிறகு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(Thiru K. S. Kothandaramiah rose)

MR. DEPUTY SPEAKER : This question relates to a remote part in Madurai district. I wonder what supplementary the hon. Member can put.

* 333. வினு.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் வட்டம், புலியூர் கிராமப் பஞ்சாயத்து நகரப் பஞ்சாயத்தாக மாற்றி அமைக்குமாறு பொதுமக்களிடமிருந்து 1972 மார்ச்சு மாதத்தில் கோரிக்கை ஏதேனும் வந்ததா?

1972 ஆகஸ்ட் 25]

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இக்கோரிக்கை பரிசீலனையில் உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, கிராமப் பஞ்சாயத்தை நகரப் பஞ்சாயத்தாக மாற்றுவதற்கு என்னென்ன தகுதிகள் வேண்டுமென்று அரசு விதி வகுத்திருக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:—தலைவரவர்களே, பேரூராட்சி மன்றமாக மாற்றியமைப்பதற்கு மக்கள் தொகை 5,000க்குக் குறைவாக இருத்தல் கூடாது; ஆண்டு வருமானம் ரூ. 10,000க்கு அதிகமாக இருத்தல் வேண்டும், அந்தப் பகுதி நகர அம்சம் பொருந்தியதாக இருத்தல் வேண்டும். மேலும் பேரூராட்சியாக மாற்றியமைப்பது கிராம வளர்ச்சி இயக்குநரின் விருப்பத்திற்கு உட்பட்டதாகும். பேரூராட்சி மன்றமாக ஆனதற்குப்பிறகு பொருளாதார நிலை மற்றவைகளெல்லாம் வளர்ச்சித் திட்டங்களுக்கு ஏற்ற வழியில் அமையுமா என்று பார்த்து இவைகளுக்கெல்லாம் இசைவு தரக்கூடிய சூழ்நிலை அமைந்தால் அதை யொட்டி பேரூராட்சி மன்றமாக்குவதற்கு அனுமதிக்கப்படுகிறது.

* 334 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :—

(*a*) whether there are proposals under the consideration of the Government to convert Madurantakam into a Municipality ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:—(a) ஆம்.

(b) மதுராந்தகம் பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற முதலில் உத்தேசிக்கப்பட்டது. இப்போழுது உத்தேசிக்கப்பட்டுள்ள நகராட்சியோடு அதைச் சார்ந்த வேறு சில பகுதிகளை சேர்ப்பது பற்றி அரசு கவனித்து வருகிறது.

திரு. கே. ஏ. வகாப்:—தலைவரவர்களே, இப்படி பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற எந்த அடிப்படை மேற்கொள்ளப்படுகிறது? சில பேரூராட்சிகள் தாங்கள் விரும்பாத போதுகூட அவைகள் நகராட்சியாக மாற்றப்பட்டு விடுகிறது. நகராட்சியாவதற்கு பேரூராட்சியில் தீர்மானம் ஏதாவது தேவைப்படுகிறதா? அல்லது அரசு அறிவிக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :—தலைவரவர்களே, ஒரு பேரூராட்சி நகராட்சியாக மாற்றப்பட 20,000 மக்களுக்கு மேல் இருக்க வேண்டும். அதன் வருமானம் ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் இருக்க